செ.வெ.எண்: 456 நாள்: 18.7.11

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (18.7.2011) தலைமைச் செயலகத்தில், 40 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தருமபுரி மாவட்டம், பாப்பாரப்பட்டியில் கட்டப்பட்ட தியாகி சுப்பிரமணிய சிவா மணிமண்டபத்தை காணொலிக் காட்சி (Video Conferencing) வாயிலாக திறந்து வைத்தார்கள்.

இந்திய நாட்டின் விடுதலைக்காகவும், சமூகப் பொருளாதார விடுதலைக்காகவும், பொதுமக்கள் நல்வாழ்விற்காகவும் தங்கள் வாழ்வையே அர்ப்பணித்த தியாகச்செம்மல்கள், தலைவர்கள், தமிழ்ச் சான்றோர்கள் ஆகியோரின் சமுதாய பங்களிப்பை போற்றும் வகையில், அவர்கள் வாழ்ந்த இல்லங்களை அரசுடைமையாக்கியும், அவர்கள் நினைவாக மணிமண்டபங்கள் அமைத்தும், அவர்கள் உயிர் நீத்த இடங்களில் நினைவிடங்கள் அமைத்தும் அரசு மரியாதை செலுத்தி வருகிறது.

தியாகி சுப்பிரமணிய சிவா மதுரை மாவட்டம், வத்தலகுண்டு என்ற ஊரில் ராஜம் ஐயர், நாகலட்சுமி அம்மாள் தம்பதியர்களுக்கு 4.10.1884 அன்று பிறந்தார். அவர் தனது 12–ஆம் வயது முதலே நாட்டுப்பற்றும், விடுதலைக்காகத் தொண்டாற்ற வேண்டும் என்ற தீரா வேட்கையும் கொண்டிருந்தார். 1906–ஆம் ஆண்டு திருவனந்தபுரத்தில் ''ஆரிய சமாஜத்தைச்'' சேர்ந்த ஸ்ரீதாகூர்கான் விடுதலை சொற்பொழிவைக் கேட்டு போராட்டத்தில் தீவிரமாக ஈடுபடத் தொடங்கினார். 1907–ல் திருவனந்தபுரத்தில் ''தர்ம பரிபாலன சமாஜம்'' என்ற அமைப்பை ஏற்படுத்தி, இளைஞர் சமுதாயம் வீறு கொள்ளும் வகையில் சுதந்திர வேட்கையைத் தனது சொற்பொழிவுகள் மூலம் ஏற்படுத்தினார். இதனால் அவர் திருவனந்தபுரம் சமஸ்தானத்திலிருந்து வெளியேற்றப்பட்டார். 7.7.1908–ஆம் ஆண்டு ஆங்கில அரசு சதி வழக்கினை இவர் மீது சுமத்தி 6 வருடம் கடுங்காவல் தண்டனை விதித்தது.

1913–ல் சென்னை வந்த சுப்பிரமணிய சிவா ''ஞானபானு'' மற்றும் ''பிரபஞ்சமித்திரன்'' ஆகிய மாத, வாரப் பத்திரிகைகளைத் தொடங்கி இந்தியா விடுதலை பெறுவதன் அவசியம் குறித்தும், விடுதலைப் போராட்டம் குறித்தும் பல கட்டுரைகளை வெளியிட்டு சுதந்திர வேட்கையை மக்களிடையே தூண்டினார்.

சென்னை, கொல்கத்தா, தூத்துக்குடி, திருநெல்வேலி போன்ற பகுதிகளுக்குச் சென்று தொழிலாளர் போராட்டங்களை நடத்தி ஆங்கில அரசுக்கு நெருக்கடியைக் கொடுத்தார் சுப்பிரமணிய சிவா. இதனால் ஆங்கிலேய அரசு, அவருக்கு கொடுமையான சிறைத் தண்டனை விதித்து, தாங்கொண்ணா சித்ரவதைக்கு உள்ளாக்கியது. இதனால் தொழுநோய் என்ற கொடிய நோயால் தாக்கப்பட்டு உடல் நைந்தார். தனது இறுதி காலத்தில் பாரதமாதா கோயில் கட்டவும், இந்திய மக்கள் அனைவரும் மொழி, சாதி, சமய வேறுபாட்டைக் களைந்து ஒன்றுபட்டு வாழ பாடுபட்டார். தருமபுரி மாவட்டம் பாப்பாரப்பட்டியில் பாரதமாதா ஆலயம் நிறுவும் முயற்சியில் ஈடுபட்டபோது 23.07.1925–ல் நோய்வாய்ப்பட்டு இறந்தார்.

தியாகி சுப்பிரமணிய சிவா அவர்களின் நினைவை என்றும் போற்றும் வகையில், தருமபுரி மாவட்டம், பாப்பாரப்பட்டியில் அவரது மணிமண்டபம் 40 லட்சம் ரூபாய் செலவில், 0.34.5 ஹெக்டர் (85 சென்ட்) பரப்பில், 205 சதுர மீட்டர் அளவில் கட்டப்பட்டுள்ளது. இந்த மணிமண்டபத்தை இன்று (18.7.2011) தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்கள். இந்நிகழ்வின்போது, மாண்புமிகு செய்தி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள், தலைமைச் செயலாளர், தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறைச் செயலாளர், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.
நாள் : 18.7.2011